திருவள்ளுவர் ஆண்டு 1979 புரட்டாசி 24
சென்னை, 9—10—48

வீச்சு 8



ந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் நேரடியாகவோ மறை
வோ பங்கு கொண்டிருக்கும் தமிழாசிரியர்கள்
ருக்கும் தக்க தண்டனை தரப்படும் என்று சட்ட
ல் எச்சரிக்கை செய்திருப்பதோடு கல்வி இலாகா
த்தரவும் பிறப்பித்திருக்கிறார் கல்வி அமைச்சர்
லிங்கம் அவர்கள்."

—பத்திரிகைச் செய்தி.

மாகாண
திராவிடர் கழக
சிறப்பு மாநாடு

★

அக்டோபர் 23, 24
சனி ஞாயிறுகளில்

★

ஈரோட்டில்!

★

மாநாட்டு வேலைகள் விறு விறுப்பாக நடைபெற்று வருகின்றன. தோழர்களே! புறப்படத் தயாராய் இருங்கள்.

ாடு 1½ அணா.
ண்டு சந்தா ரூ. 5

வெளி நாடு 2 அணா.
ஆண்டு சந்தா ரூ. 6½

சிலையின் சிரிப்பு!

[அரசிளங்கோ]

நான் தங்கமணி தினத்தாளின் ஆசிரியன். கையில் சில புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஆபிஸை நோக்கிப் புறப்பட்டேன். பாதி தூரம் வந்து கொண்டிருக்கும் சமயத்தில் கோடை மழை திடுதிப்பென்று வந்து 'சோ,' என்று கொட்ட ஆரம்பித்து விட்டது.

சுற்று முற்றும் பார்த்தேன். என் எதிரே ஒரே மைதானம். என் அருகில் கொட்டகை ஒன்று தெரிந்தது. அதனுள் சென்றேன். ஒரு அழகான சிலை காட்சியளித்தது. அதன் கீழ் உட்கார்ந்து கொண்டு மைதானத்தை நோக்கிக்கொண்டிருந்தேன்.

மைதானத்திற்கு அப்பால் ஓடும் கூவம் ஆறு—அதன் அருகாமையில் ஆட்சியாளர் ஆட்சிபுரியும் அழகான பணிமனை—மூன்று வண்ண நிறத்தில் வானளாவப் பறக்கும் கொடியின் அழகு-இவைகளைப் பற்றி என் சிந்தனை தாவியோடியது,

சிறிது நேரம் கழிந்தது. மழை விட்டபாடில்லை. திடீரென்று என் மேல் 'பொத்'தென்று இரண்டு துளி தண்ணீர் விழுந்தது. நான் நிமிர்ந்து மேலே பார்த்தேன். மீண்டும் கண்களை நன்றாகக் கசக்கிக்கொண்டு உற்று கவனித்தேன். ஆம். உண்மைதான். சிலை என்னைப் பார்த்துச் சிரித்தது. அதன் பளிங்குக் கண்களில் கண்ணீர் பொல பொல வென்று பெருகிக் கொண்டிருந்தது.

எனக்கு மிகவும் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. மீண்டும் மீண்டும் அச்சிலை என்னைப் பார்த்து சிரிக்கச் சிரிக்க எனக்கு திகில் எடுக்க ஆரம்பித்தது.

இருந்தாற் போல் திடுதிப்பென்று சிலை என்னைப் பார்த்துப் பேச ஆரம்பித்ததும் எனக்கு இன்னும் திகிலும் பிரமிப்பும் உண்டாய்விட்டது.

"அதோ தெரிகிறதே! தெரிகிறதா?" என்று சிலை சுட்டிக் காட்டியது. திசையை கவனித்து விட்டு சிலையை நோக்கினேன்.

சிலை பேச ஆரம்பித்தது.

"அதுதான் அவன் அரண்மனை. அரண்மனை என்று சொல்லிய உடனே உருசி நிறைந்த உணவை உண்டு கொழுத்து விட்டு உப்பரிக்கையில் உல்லாசமாக உலாவும் உலகாள்வோரைப் பற்றிய நினைப்பு வந்துவிடப் போகிறது உனக்கு. நான் சொல்வது ஓலையால் ஒட்டப்பட்ட குடிசை; அது அவனுக்கு அரண்மனைதானே!

எந்தக் காலத்தில் போடப்பட்ட கூரைகளோ யாருக்குத் தெரியும். கரையான் தின்றதுபோக மிஞ்சியது மிச்சம். ஓலைக்குடிசை, ஒளி புகும் ஓட்டைக் குடிசையாக மாறி விட்டது. இன்றோ நாளையே என்று ஆடிக்கொண்டிருக்கும் பொலபொலத்த மண் சுவர்கள் தான் அதன் அஸ்திவாரம்.

இவைகளைச் சீர் செய்யவோ செப்பனிடவோ அவனால் முடியவில்லை. கதியுமில்லை. எந்தவித உதவியுமற்ற அனாதி, என்னைப் போல் தான் என்று வைத்துக் கொள்ளேன்" என்று கூறி சற்று நிறுத்தியது சிலை.

எனக்கு வருத்தம் தட்டியது. தன்னையும் நாதியற்றதாகக் கூறியது என் மனதை என்னவோ செய்தது, பதில் பேசவோ தைரியமில்லை. பயம் மிகுந்திருந்த காரணத்தால், மௌனியாக இருந்தேன்.

சிலை மேலும் கூறிற்று. "அவனோ யாரும் தீண்டமுடியாத அனாதியாக இருக்கிறான். ஆனால் எனக்கோ கூரைபோட்டு சிமெண்ட் கிடைக்காத காலத்தில் கள்ளமார்கெட்டில் சிமெண்ட் வாங்கி சுவர் வைத்து அதற்கு அழகான வாசல் அமைத்து மழை, வெய்யிலினின்றும் காப்பாற்றிவிட்டான் எவனோ ஒருவன். அவனுக்கு என்மேல் இவ்வளவு பக்தி, சிரத்தை, அன்பு எப்படி ஏற்பட்டது என்பது எனக்கே தெரியாது. அவன் குடிசையில் இருக்கிறான், நானோ அ
மைந்த கட்டிடத்தினுள் வீற்றிரு
றேன். எல்லாவற்றையும் தா
நீயே பார்க்கிறாயே!"

நான் நிமிர்ந்து பார்த்தே
அந்தக் குடிசை தெரிந்த
விலங்கு வாழ்குடிசை கூட நன்
இருக்கும். அதையும் மிஞ்
தோற்றமளித்தது அவன் குடி
ஆனால் அது அவன் வாழும் அர
மனை-சொர்க்கம்நரகம்கூடத்தா
அதைக் கண்டு என் உள்ளத்தி
ருந்து பெருமூச்சு வெளிப் பட்ட

சிலையும் ஆரம்பித்தது க
சொல்ல; நானும் தயாரானே
கதை கேட்பதற்கு.

"கூட்டம் முடியும்வரையில் க
திருந்தான். நீதான் அன்று மு
கிய பேச்சாளன். நீ உன் மூட்ட
களை அவிழ்த்துவிட்டாய். நீ வி
சரடும், பொய்யும், புளுகும் சபா
பட்டம் பெற்றுவிட்டது. கூட்ட
கலைந்தது. கடைசி வரையில் கா
திருந்தான் அவன். கிராக்கி அ
படவில்லை. நீ வந்து சேர்ந்தா
உன்னை அவன் வீடு கொ
போய்ச் சேர்த்தான். வழக்க
போல் உன் இரண்டணா அவ
கையில்விழுந்து உருண்டோடிய
அதை யெடுத்துக்கொண்டு
டுக்கு நடைகட்டினான்.

"தாங்கள் சொல்லும் அ
யார்?" என்று நான் கேட்டு
டேன் இன்னும் பயம் அடியே
நீங்காத நிலைமையில்.

"கல்லும் மண்ணும், சுண்ண
பும் இரும்புமாய் இருக்கும் என்
இவ்வளவு மரியாதையுடனும்
பத்துடனும் கேட்கும் அன்
உன் சமூகத்திலேயே மனிதனா
பிறந்து, சகோதரனாய் வாழ முடி
மல் மாடாய் உழைத்து, உனக்
வும் உன் இனத்திற்காகவும்
லல் படும்-அந்த மனித உயிரை
வளவு துச்சமாய் ஈனமாய்
கிறாய்? தொட்டால் தீட்டு ஒ
கொள்கிறது என்று தலை மு
றாய்! ஆனால் உழைத்து உழை

வயிறு காய்ந்தாலும் பிறர்
ண உணவுதரும் அவனைப்போ
ருரின்பலனை நீ அனுபவிக்கிருய்!

ற்றம் எடுக்கும் கேடு கெட்ட
த்தை நெஞ்சு கூசாமல் உன்
ங்கு கை விரல்களால் தொட்டுத்
டக்கின்ருய்! ஆனல் மனிதப்
வியெடுத்த அவனைத் தீண்டினல்
ம் சம்பவிக்கும். சண்டாளன்,
ன், தீண்டப்படாதவன் என்று
ட்டுகிருய்!

னக்கு உப்பரிக்கை அமைத்
கொடுத்தவன் அவன். உட்
ஆசனம் செய்து தந்தவனும்
ன்தான் அவனைப் போய்—
னைப்போன்று எல்லா அங்கங்
யும் குறைவு இல்லாமல்
ண்டு பிறந்த அவனை, மாடினும்
லமாக நினைத்துப் பேசுகிருயே
! அப்படிப்பட்ட நீயா சுண்
பால் செய்யப்பட்ட என்னை
கள் என்று அழைக்கிருய்?
சார வார்த்தையுடன் பேசு
யே என்னைப் பார்த்து.
ப்பா அப்படி? என்னை ஒரு
ப் பொருளாகவே நினை"
று எனக்கு ஒரு சூடு கொடுத்து
டு கதையை மேலும் சொல்ல
ம்பித்தது.

ஒட்டிய வயிறு. பஞ்சடைந்து
விழுந்திருந்த கண்கள். எண்
கூடிய எலும்புகள். அத்தனை
பார்த்தால் அவன் வறுமை
ன் போராடிக்கொண்டிருக்கி
என்பது நன்கு தெரியும்.

வன் வாழ்க்கை சத்தும் அற்
; சாரமும் அற்றது. உயிர்
ழையில் இப்பொழுதோ
த்த விநாடியோ என்று தொங்
காண்டிருந்தது, அவனது
ன வயிற்றுக்கு நாள்தோறும்
ம்போடும் கதியை நினைத்து
த்து ஏங்கி ஏங்கி ஏக்கமடை
கத்தவிர அவன் முன்னேற
ன்ன இருக்கிறது?

ழைத்தாலும் உண்ண உணவு
க்காதவன். பாடு பட்டும்
காணுதவன். அவன்
ன்தாஞ என்று கேட்பாய்?
னைப்போல் ஊதாரிகளாய்
பவர்களைத் தவிர மற்ற யாவ
நிர்க்கதியற்றவர்கள். வாழ்க்
யப் போர்க்களமாகக்
ண்டவர்கள்தான். சதாசர்வ
மும் வாழ்க்கைப் போர் நடத்

தும் நாதியற்ற நடராசர்களே யல்லாது அம்பலத்தில் நடனமாடும் நடராச சுந்தரிகளல்ல.

அவன் யார் என்று கேட்டாயே? உனக்கு எப்படித் தெரியமுடியும் நீ இலக்கியத்தில் விபசாரம் செய்யும்பொழுது. நீ 'விபசாரி' என்று மகுடந் தீட்டி கதையெழுதுகிருய். ஆனல் நீயும் விபசாரியைப் போல் விபசாரம் செய்கிறவன் என்பதை மறந்து விடுகிருய். கதை, கட்டுரை தீட்டும்பொழுதெல்லாம் விபசாரம் செய்கின்ருய். தன் குற்றத்தை யுணராத நீ பிறரை 'விபசாரி' யென்று கூசாமல் அழைக்கின்ருய்.

சமூகத்திற்கு நன்மை பயக்காத செயல்களை இல்லாததை இருப்பதாகப் புனைந்து, அதற்கு மெருகிட்டு, பத்திரிகையில் வெளியிட்டு விடுகிருய். பாடுபடும் பாட்டாளி நண்பனைப்பற்றி நீ எழுதியதில்லை; நெஞ்சுவாட உழைக்கும் உழவனைப்பற்றி மருந்துக்கேனும் ஒரு வார்த்தைகூட நீ அச்சில்சேர்த்ததில்லை; பாடுபடும் பாமரனைப்பற்றி அவன் விடும் இரத்தக் கண்ணீரைப்பற்றி நீ சிந்தித்தது கிடையாது. சிரிக்கும் இராமாயணம், கந்தன் கண்ட காட்சி, கம்பர் தரும் விருந்து, நெஞ்சை உருக்கும் தேவாரம் இவைகளைப்பற்றி பத்தி பத்தியாக எழுதி காகிதத்தை நிரப்புகிருயே தம்பி! உனக்கு நான் யாரென்று சொன்னல் புரியுமா? புரியாவிட்டாலும் சொல்லுகிறேன்.

அதோ பார்! வருகிற ஒருவனை. அடுத்தபடியாகப் பார். எத்தனை பேர். அச்சப்படாதே நூற்றுக் கணக்கானவர் இருப்பதைப் பார்த்து. மறுபடியும் பார். நூறு ஆயிரக்கணக்கில் கோவணாண்டிகளாய் எலும்புந்தோலுமா யிருப்பவர்கள் வீதியைச் செப்பனிட ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் எல்லாம் உன்னைப்போல் பிறந்த பிறவிதானே? அவர்களை அவமதிப்பது அழகா? அவர்களை நீ முன்னுக்குக் கொண்டுவா என்று உனக்கு விண்ணப்பிக்கவில்லை நான் அவர்களுக்குத் தெரியும் எப்படி முன்னேற்றமடைய வேண்டுமென்று.

உன் நயவஞ்சகப் பொய் புளுகுகளையும், உருட்டுபுரட்டல்களையும் விட்டுவிடு. உன் சுயநலத்தை நசுக்கு. சுய ஆசையைப்போக்கு; உன் சுய ஆடம்பரத்தைவிட்டு விலகி நில். பிறகு பார் படைகள் முன்னேறுவதை. நீயாக அவர்களைச் சீர்திருத்தவேண்டிய அவசியமும் அதற்காக ஏற்பட்டவன் நீ தான் என்ற அகந்தையும் கொள்ளாமல் 'சிவனே' யென்று சும்மா யிருந்தால் போதும்.

அதுபோகட்டும் சொச்சக் கதையைக் கேள்.

"அவன் தள்ளாடி தள்ளாடிக் கொண்டே போனன். அவன் பின்னல் அவன் ரிக்ஷாவும் உருண்டு ஓடிவந்தது."

"என்ன ரிக்ஷாகார முருகேசஞ"

"ஆம்! ரிக்ஷாகார முருகேசன் தான். அவன்தான் உனக்கு வழக்கமாக ரிக்ஷா இழுப்பவன்... இல்லையா?"

"அன்று அவனுக்கு சவாரியே கிடைக்கவில்லை.. ஏக்கமடைந்தான், மனம் கவலைப்பட்டது. பசி வீணை மீட்டியது. பல எண்ணங்களை அவன் நினைக்க வேண்டியிருந்தது.

அவனுக்கு ஒரே தங்கைதான் பொன்னி. அவள்தான் அவனுக்கு உயிர். அவளுக்காகவேதான் இந்த இழி வேலையை மேற்கொண்டான். 'பொன்னி, தங்கச்சி—பத்திரமாயிரு' என்று ஒரு ஆயிரந் தடவை 'பத்திரம்' சொல்லி விட்டுக் கிளம்புவான். திரும்பி வரும் போது ஓரிரு தின்பண்டங்களை—அதுவும் அன்று கூலி அதிகமாகக் கிடைத்தால் வாங்கிக் கொண்டு வருவான்.

அவர்கள் வயிற்றுக்கு அரை குறை ஆகாரமே தினமும் கிடைப்பது. அதுவும் சில நாள் இல்லாமல்கூட போய்விடும். வரும்படிக்குத்தக்க குடித்தனம்!

அவளுக்கு ஒரு புடவை வேண்டியிருந்தது. கட்டியிருந்த கந்தலும் கந்தலாகிவிட்டது, இவன் என்ன செய்வான். வருடக் கணக்கில் வருமா வாங்கிய நாலு ரூபாய் புடவை?

தினம் வளரும் தங்கையின் வனப்பைக் கண்டு சந்தோஷம் ஒரு சிறிது அடைந்தாலுங்கூட அவன் உள்ளத்திலிருந்து வெளிப்படுவது நீண்ட சோக மூச்சுத் தான். பொலிவு பெற்று விளங்கும்

அவள் முகம் பசியினால் அடிக்கடி வாடி வதங்குவதைக் காண அவன் உள்ளம் துடிப்பான். மாடாய் உழைத்து உழைத்து பட்டினி கிடந்து பரதவிப்பதைவிட ஆண்டவன் அடியை அண்டுவதேமேல் என்று நினைப்பதில் என்ன தவறு?

சொர்க்கத்திற்கு வழிகாட்டுகிறேன் சொக்கா என்று கூறினால் கூட அதற்கென்று அவன் ஒரு தம்படி செல்லாக்காசு தரமாட்டான். சொர்க்கம், சொர்க்கம் என்று சொல்லி மோக்ஷ உலகத்திற்கு வழிகாட்டுகிறேன் என்று வாயடித்துப்பேசி தகிடுதத்தம் செய்யும் தரகர்களைப் பற்றி அறியாதவனா அவன்!'' என்று சிலை சொல்லி நீண்ட பெருமூச்சு விட்டது. சிலையைப் பார்த்தேன், அதன் கண்கள் நீரில் மறைக்கப்பட்டிருந்தன.

மீண்டும் சொல்ல ஆரம்பித்தது.

''அவன் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு புறப்பட்டான்.

அண்ணா என்றாள் அவள். அவள் குரல் கம்மியது. கண்களிலிருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்தன.

திரும்பிப் பார்த்தான். 'ஏனம்மா' என்ற அன்பு கலந்த குரல் அவன் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டது. முருகேசன் நெருங்கிவந்து அவள் கன்னத்தில் தேங்கி நிற்கும் கண்ணீரைத் துடைத்தான்.

'பொன்னி! நமக்கு இந்த ஜன்மத்தில் விடிவு காலம் இல்லை. ஆண்டவன் கட்டளை இந்த ஓலைக்குடிசையில்இருக்கவேண்டுமென்பது! நமக்குக் குடிப்பதற்குக்கூழ்கூட இல்லை. ஒன்றுமே வேலைசெய்ய முடியாத உஷ்த்தர்கள் உப்பரிக்கையில் உல்லாசமாக இருக்கிறார்கள். நாம் ஏழை. ஏழையென்று சமூகத்தால் விரட்டியடிக்கப்பட்டவர்கள் நாம். நமக்கா கடவுள் கருணை காட்டப் போகிறார்?

பொன்னி! அழாதே. நாம் பட்டினி கிடக்க வேண்டுமென்று இருக்கும்பொழுது நம்மால் என்னம்மா செய்யமுடியும். இன்றைக்கு எப்படியும் நிறைய சம்பாதித்துக்கொண்டு வருகிறேன்.'' என்று வாஞ்சையுடன் அவள் முகத்தைத்தடவி விட்டு ரிக்ஷாவைப் பிடித்தான்.

சிறிது நேரத்தில் அவன் கால்கள் ரிக்ஷாவுடன் போட்டிபோடலாயின. வாசலில் நின்று கொண்டே அண்ணனைக் கவனித்துக்கொண்டிருந்தாள் அவள்.

இரவு மெதுவாக எட்டிப்பார்த்துக்கொண்டே வந்தது.

முருகேசனும் மெதுவாகத் தள்ளாடிக்கொண்டே வந்தான். ரிக்ஷா மேடு பள்ளமெல்லாம் உருண்டு அவன் பின்னே வந்தது.

மெதுவாக குடிசையில் கால் வைத்தான். அவன் கால்கள் பின்னின, கீழே விழும் நிலையில்.

பொன்னியின் முகம் வெளிறிற்று, இன்னதென்று அறியமுடியாத காரணத்தால். ஏதும் அறிய முடியாத ஏக்கம் அவள் உள்ளத்தில்.

கீழே விழப்போகும் அண்ணனை மெதுவாகத் தாங்கிக்கொண்டாள். அவள் கண்கள் ஏனோ அவளையறியாமல் நீரை சர மாரியாகப் பொழிந்தது.

'பொன்னி! பொன்னி' என்றான். கள்ளரை விரட்டி மக்களைக் கண்ணிமைபோல் காக்கும் சிவப்புத் தொப்பியார் அளித்த அன்பளிப்பு — ரிக்ஷாவில் இருவரை ஏற்றியதற்காக அளிக்கப்பட்டது தான் இது.'' என்று முனகிக்கொண்டே அவள் மடியில் சாய்ந்தான்.

அவன் மண்டை உடைந்து இரத்தம் கொட்டி கட்டிப் போய் இருந்தது.

விம்மினாள். அழுதாள். 'அண்ணா' என்று அலறினாள். அது தானே அவளால் செய்யமுடியும்?''

'என்ன! கேட்கிறாயா கதையை' என்று என்னைப் பார்த்தது சிலை.

நான் மௌனமாகத் தலை நிமிர்ந்தேன். என் கண்களிலிருந்து கீழே விழுந்த நீர்த் துளியைக்கண்டு சிலை மேலும் சொல்லத் தொடங்கிற்று.

''நீண்ட நேரம் கழித்துத்தான் கண்விழித்துப் பார்த்தான். அவன் தேகம் அனலாகக் காய்ந்தது. அவளுடன் பேச முயன்றான். அதற்குள் அவன் மார்பு அடைத்தது. அவள் இளம் மேனியின் வனப்பைக்கண்டு பெருமூச்செறிந்தான். அவன் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் உதிர்ந்து அவள் தேகத்தைச் சுட்டது.

(11-ம் பக்கம் பார்க்க)

சிறந்த வெளியீடுகள்:

★

	ரூ.	அ.
சித்திரபுத்திரன் (பெரியார்)	0	6
புதியதோர் உலகு (பெரியார்)	0	6
ஈரோட்டுப் பாதை (இளஞ்செழியன்)	0	6
திராவிடஸ்தான் வேண்டாமா	0	8
காரல் மார்க்ஸ்	1	0
எது இசை	0	6
திராவிடர் நாகரிகம்	0	10
தமிழர் யார்	0	8
ஆரியர் தமிழர் கலப்பு	0	8
தமிழ் பழமையும் புதுமையும்	0	8
தேன் கூடு (கவிதை)	0	2
தமிழ் ஆராய்ச்சி	0	6
தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா	0	4
பெண்ணே பெரியவள் —ஏன்	0	8
பெண்கள் உலகம்	0	12
மனிதன் எப்படித் தோன்றினான்	0	8
தமிழரின் மறுமலர்ச்சி	0	8
தமிழர் சமயம்	0	8
ஆரிய வேதங்கள்	0	10
மரணத்தின்பின்	0	8
சிந்துவெளித் தமிழர்	0	8
ஐக்கிய திராவிடம்	0	12
இராவணன் வித்தியாதரனா	0	6
இந்தியாவில் சோஷலிசம்	0	12
இந்துமதம் தமிழர் மதமா	0	8
தமிழர் சமயம் எது	0	8
கவிஞர் விழா	0	6
புரட்சிப் பெண்	0	8
திராவிட மொழிகளும் இந்தியும்	0	6

தபால் செலவு
தனித்தனி 0 1 0

★

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.

வல்லரசுகளின் விளையாட்டு!

யுத்தம்—அது வல்லரசுகளுக்கு ஒரு விளையாட்டு! ஆனால் மக்கள் சமுதாயத்திற்கோ தாங்க முடியாத வேதனை!

போர்! போர்! என்று முழக்கமிடுவது ராஜ தந்திரிகளுக்கு ஒரு பொழுதுபோக்கு! ஆனால் உலகெங்கணுமுள்ள கோடான கோடி மக்களுக்கு பொறுக்க முடியாத சித்திரவதைக்கு அச்சாரம்!

பாசறை அழைக்கிறது! புறப்படு களத்திற்கு!—இது வெறும் சொல் அடுக்கு ஆளவந்தார்களுக்கு! ஆனால் மரணதேவதையின் கோரச் சிரிப்பு—மக்களுக்கு!

"படைகள் பெருகட்டும்! கப்பல்களின் எண்ணிக்கை ஏறட்டும்! வானூர்திகளின் தொகை இரட்டிப்பாகட்டும்! போர் தொடங்கட்டும்! பகைவன் வீழ்ச்சி பெறட்டும்!"

—இது அழகான சொற்பொழிவின் ஒரு பாகம், பிரதம மந்திரிகளுக்கு! ஆனால், வாழ்க்கை, பூந்தோட்டத்திலிருந்து பாலைவனத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கான அறிகுறி விளக்கம் நாட்டு மக்களுக்கு!

ஆம்! யுத்தம் யுத்தம் என்று கோஷமிடும் ராஜ தந்திரிகள், நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள "நல்லறிவாளர்கள்", மாபெரிய வல்லரசுகளை ஆட்டிப் படைக்கும் மகத்தான பொறுப்புகளை தமக்குத்தாமே ஏந்திக்கொண்டுள்ள ஆணமுகர்கள் இந்த வேற்றுமையை எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்க்கும் அளவுக்கு பொறுமையோ, ஓய்வோ, திடசித்தமோ, கருத்துத் தெளிவோ அவர்களுக்கு இருப்பதில்லை! அவர்களுக்கு, அவை, இருப்பதில்லை என்றால், அதன் விளைவு சாமானியமா? அமைதியாக வாழும் மக்கள் வட்டாரத்தில் அமளியை அல்லவா ஆரம்பித்து வைக்கிறது அவர்களுடைய அந்த மந்த மதிப்போக்கு!

யுத்தம் வருகிறது என்றால் அதன் கோர விளைவுகள் என்னென்ன என்பது எல்லோரும் அறிந்ததுதான். அதிலும் இந்நாளில் யுத்தம் என்றால் முன்போல "எங்கோ ஓர் ஆற்றங்கரையிலே இரு படைகள் சந்தித்தன, ஒரு படைத் தலைவன் களத்திலே சாய்ந்தான், மற்றவன் வாகை சூடினான்—போர் நின்றது" என்று சேதி இருக்கமுடியாது: உலகிலே எங்கோ ஒரு மூலையிலே போர் என்றால் அந்தப் போர் உலகெங்கணும் உள்ள மக்களைத் தாக்குகிற காலம். விஞ்ஞானம், மிகப் பரந்து கிடந்த உலகத்தை சின்னஞ் சிறியதாகக் குறுக்கிவிட்டது. ஆகவே உலகத்திலே ஒரு புறத்திலே போர் என்றால் ஒரு சில வினாடிகளிலே அந்தப் போரின் வெப்பம் உலகத்தின் ஏனைய பகுதிகள் அத்தனையிலும் பரவிவிடுகிறது. இந்நாளில், போர், இன்ன இடத்தில் இன்னினாருக்கு இடையே மட்டும்தான் தன் கோர நர்த்தனத்தை நடத்திக் காட்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லவும் முடியாது. 6000 மைலுக்கு அப்பால் உள்ள ஜெர்மனியிலே போர் என்றால் இங்கே இருக்கிற காட்டுப்பாக்கத்தில் விளக்குகளை **'இருட்டடைப்'**புச் செய்யவேண்டியது அத்தியாவசியம் என்று கருதப்படுகிற நிலை, இன்று! இந்நாளில் போர் தொடங்கிவிட்டால் 'களம்' எங்கோ ஓர் இடத்தில் மட்டும்தான் இருக்கும். அங்கேமட்டும்தான் போர் நடக்கும் என்று சொல்லமுடியாது, வீட்டுக்கு வீடு போர்க்களம் ஆகிவிடும்—அந்த நாட்டிலே 'போர்' தத்துவப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும்! எங்கேயோ போர் நடந்தது என்றாலும் இங்கே இருந்த நாம் வயிறார உண்பதுபோய் அளவரிசி உண்ண வேண்டி ஏற்பட்டது, விருப்பம் போல் உடுப்பதுபோய் 'ஆண்டுக்கு 5 கெஜம்' என்று ஆளவந்தார்களால் அளந்து தரப்படும் ஆடையையே அணியவேண்டி ஏற்பட்டது, உளுந்துக்கும் துவரைக்கும் கடலைக்கும் கொள்ளுக்கும் சர்க்கரைக்கும் வெல்லத்திற்கும் கட்டைக்கும் மண்ணெண்ணெய்க்கும்கூட பஞ்சமும் பங்கீடும் ஏற்பட்டது, கள்ளமார்க்கட் கழுகுக்கும் அகோர விலை மலைப் பாம்புக்கும் பயந்து பயந்து மக்கள் வாழ வேண்டிய நிலை நேரிட்டது. எத்தனையோ பேருடைய வாழ்வு சிதைந்தது, எத்தனையோ பேர் இந்த யுத்த வெள்ளத்தில் சிக்கிச் சிதைந்து போயினர், எத்தனையோ பேர் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினர். பசி, வங்காளப் பஞ்சம், எலும்புமலைக் குவியல், இரத்த ஆறு ஓட்டம் இவ்வளவும் இங்கே ஏற்பட்டது. இங்கே என்றால் யுத்த அரங்கத்தில் நுழையாத இங்கே! நேரிடையாகக் களத்தில் குதிக்காத இங்கே! போருக்குச் செல்லாத இந்தியா என்ற உபகண்டத்தில்!

போர்க்களத்தில் புகாத நாட்டு மக்கள் வாழ்வே இவ்வளவு நசிந்து போகுமானால் நேரிடையாகப் போரிலே இறங்கி, பட்டாளங்களை செருக்களம் நோக்கிச் செல்க எனச் செலுத்தி, ஆயுதங்களையும் தளவாடங்களையும் மலைமலையாகக் குவித்து, வெடிகுண்டுகளை மாற்றார் மீது வீசியும் மாற்றார் குண்டுகள் தம்முடைய மாடமாளிகைகளின் மீதும் நாடு நகரங்கள்மீதும் வீசப்படுவதை ஏற்றுக்கொண்டும் இருந்த பிரிட்டன், பிரான்சு, ரஷ்யா போன்ற நாடுகள் எவ்வளவு தூரம் சிதைந்திருக்க வேண்டும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை, நானிலம் அதை நன்கறியும்.

ஓடிக்கொண்டே இருக்கும் கப்பல் மாற்றார் குண்டு பட்டு மாக்கடலிலே கவிழ்ந்து போவதும், கடகடவெனச் சென்றுகொண்டிருந்த இரயில் தடதடவென வீசப்பட்ட பகைவர் குண்டு வீச்சால் மடமடவென முறிந்து வீழ்வதும், தெருவிலே சிரித்து விளையாடிக்கொண்டிருந்த சிறு குழந்தைகள் பகைவர் விமானங்கள் விண்ணிலே வட்டமிடுவதை அண்ணாந்து பார்த்து அடுத்த வினாடி அவற்றின் தாக்குதலுக்கு ஆளாகி மடிந்துபோவதும், வீட்டிலே, அமர்ந்து, அமைதி வாழ்க்கை புரிந்துகொண்டிருந்தவர்கள் தலைமீது குண்டுகள் வீழ்ந்து அவர்கள் வாழ்வு முடிவதும், வெளியே போனவர்கள் வழியிலே பிணமாவதும், உள்ளே நுழைந்தவர்கள் வெளியே போகுமுன் மாண்டு மடிவதும் சர்வ சாதாரண சம்பவங்கள், இன்றைய போரில்!

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

9—10—48 சனிக்கிழமை

வெல்க மதுவிலக்கு!

"இப்போது கூடாது!"

"பண உதவி கிடைக்காது!"

"எங்களிடமிருந்து ஒரு காசும் வாராது."

"திட்டத்தை ஒத்திப்போடுவதே புத்திசாலித் தனம்."

"பொருளாதாரக் கலை நுணுக்கம் தெரிந்தவர்கள் ஒத்திப்போடாமல் இருக்கமாட்டார்கள்!"

"இப்போதென்ன அவசரம் இதற்கு?"

"இந்த திட்டம் நிறைவேறினால் சர்க்காருக்குச் செலவு அதிகம் சர்க்காருக்குச் செலவு அதிகம் என்றால் சர்க்கார் கஜானாவிலிருந்து மக்களுக்குப் பணம் போகிறது என்று பொருள். அதாவது நாட்டில் பணப் பெருக்கம் ஏற்படுகிறது என்று அர்த்தம். இன்று பணப்பெருக்கம் ஏற்படுமானால் அதைவிடக் கேடு தரும் திட்டம் நாட்டுக்குவேறு இருக்கமுடியாது!"

சென்னையைப் பார்த்து டில்லி இதுபோலக் கூறிற்று—கூறிற்று, இல்லை, கட்டளை இட்டது—கூறிற்று என்பதைவிட கட்டளை இட்டது என்பதுதான் பொருத்தமான வாசகம்—கட்டளை இடுவதற்குத்தானே தான் அதிகார பீடத்தில் ஏறி அமர்ந்திருப்பதாக டில்லி கருதுகிறது—ஆகவே அது கட்டளை இட்டமானால் அதில் வியப்பதற்கென்ன இருக்கிறது—ஆனால் வியத்தற்குரிய பகுதி; சென்னை, அல்ல, சென்னை சர்க்கார், இந்த டில்லி தாக்கீதை உதறி எறிந்துவிட்டு, எத்தகைய அச்சம் தயை தாட்சண்ணியமுமின்றி, டில்லி தேவதைகளின் முறைப்புக்கும முணுமுணுப்புக்கும் கொஞ்சமும் அஞ்சாமல், மேலிடம் ஆயிற்றே—நமக்குத் தேசிய எஜமானர்கள் ஆயிற்றே—அவர்கள் சொல்லை மீறுவது தேசத் துரோகிகள் என்ற பட்டத்தை நமக்குத் தேடித் தருமே—ஆகுமோ இந்தப் போக்கு—வடநாட்டு மேலிட உத்தரவை எதிர்த்து நின்றால் நம்மை காங்கிரஸ் போர்வையில் இருக்கும் திராவிடக் கழக ஆசாமிகள் என்று ஏற்கெனவே அலர் தூற்றி வரும் தேசியத் தப்பட்டைகள் மேலும் பல பல கூறுமேஎண்ணித் தயங்காமல், தங்கள் திட்டத்தை நடைமுறைக் கிதமாக மாற்றி இருப்பதுதான்.

மது, ஆயிரமாயிரம் குடும்பங்களை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக ஈவு இரக்கமின்றி கொட்டி வந்த வேதனைத் தேள்.

மது, உழைத்து உருமாறினாலும், உழைப்பின் பலனைக் கிடைத்த ஊதியத்தை, உழைப்பாளியின் குடும்பத்திற்குச் சென்று சேராத வண்ணம் அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் இடையே நின்று அதனைத் தட்டிப் பறித்து வந்த வஞ்சக் கள்ளன்.

மது, மக்கள் உடலை மட்டுமல்ல, அவர்கள் த உள்ளத்தையும், மக்கள் வாழ்வை மட்டுமல்ல அந்த வாழ்விலே சிறந்து பொலிய வேண்டி குடும்பப் பற்று, அன்பு, பெருந்தன்மை, கணவன்—மனைவி பாசம், தந்தையர்—தனயர் அன்பு இ தனையையும் சிதைத்துச் சிதைத்து மக்கள் சமு தாய வாழ்க்கையைச் சீரழியச் செய்து வந்த ஆயிரங் காலத்துக் கரையான்.

மது, எண்ணற்ற மக்களை திடும் திடும் என விழுங்கி வந்த மலைப் பாம்பு! அமைதியாக வாழ்க்கைக் கடலிலே இன்ப புரிப் பயணம் செய்து கொண்டிருந்த பல குடும்பப் படகுகளை ஒ அடியில் அடித்து வீழ்த்திய திமிங்கிலம்! தன்பா ஒரு முறை சிக்கிக் கொண்டவர்களைச் சிறிது விடாது, கெட்டியாய்ப் பற்றி வீழ்த்தி வ ப.மும் முதலை! சாந்தம் சமாதானம் அன் அமைதி ஆநந்தம் இத்தகு பண்புகள் இருந் கோல் ஓச்சிய மாண்புறு இடங்களில், பூசலையு பொச்சரிப்பையும் செத்த வாழ்வையும் சிடுசிடு ப்பையும் அமளி குமளியையும் அதன் விளைவா வேதனைக் கண்ணீரையும் மூட்டிவிட்ட கயவன்.

மது, சிதைத்த குடும்பங்கள் எத்தனை! அதனால் பாழாக்கப்பட்ட வாழ்க்கைகள் எவ்வளவு! அதன் கொடுக்குகளிற் சிக்குண்டு, பிறகு விடுபட முடியாமல் தத்தளித்த தூயோர்தம் துயர்மிகு சரிதைகள் கொஞ்சமா! பாட்டாளிகளின் கூட்டம் அதன் கூரிய ஈட்டிமுனையாலே குத்தப்பட்டு பட்ட து ரம் என்ன அளவிட முடியுமா! இதனை எண்ணி பார்க்கும் எவரும் மது எனும் கொடுமை மக்கள் வாழ்விலிருந்து விலக்கா முன்னர் ம அமைதி பெறுவதுதான் ஆகுமா!

(12-ம் பக்கம் பார்க்க)

சோதனை முடிந்தது!

"உணவுக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பங்கீட்டுத் திட்டம் எடுக்கப்பட்டு, அளவரசி முறை நீக்கப்பட்டால், அரிசி, அரசியலார் குறிப்பிடும் விலைக்குக் கிடைக்காது. விலை உயரும். மேலும் மேலும் உயரும். ஏழை மக்களின் கரம் தாவமுடியாத உயரத்திற்கு விலை ஏறும். விலை ஏற நாங்கள் விடமாட்டோம்—விலையை சட்டத்தால் திட்டப்படுத்திடுவோம் என்று ஆளவந்தார்கள் கூறுவாராயின், வணிகர்கள் **அரிசி இல்லை** என்று கூறிவிடுவர். உண்மையிலேயே அவர்களிடம் அரிசி இல்லாமல் போய்விடுமோ? போகாது. அரிசி இருக்கும்; ஆனால் அது கள்ளத்தனமாக விற்கப்படும் அதிக விலையில்! பணமுடையவர்கள் எந்த விலையாயினும் சரி என்று வாங்குவர்; ஏழையர் கூட்டம் என் செய்வோம் என்று கை பிசைவர். சமுதாயத்தின் மேல் தளத்தில் இன்பபுரிப் பயணம் செய்பவர்கள் மட்டுமே வாழவும், அதன் அடித்தளத்தில் உலவும் பாட்டாளிகளின் பட்டாளம் உணவு பெற முடியாது ஒடுங்கிச் சாகவுமான நிலையே அன்று ஏற்படும். இந் நிலை ஏற்படலாமா? ஏற்படவிடுவது முறையா? **அல்ல எனில் உணவுக் கட்டுப்பாடு இப்போது எடுபடக்கூடாது.**"

சர்க்கார், உணவுக் கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்தி, பல இடங்களில் பங்கீட்டு முறையை எடுத்துவிட்டபோது **போர்வாள்**, தீட்டிய தலையங்கத்தின் ஒரு பகுதி இது.

அரிசிக் கட்டுப்பாடு எடுபடக்கூடாது—எடுபட்டால் அரிசி விலை ஏறும்—ஏறினால் ஏழை மக்கள் எளிய விலையில் அரிசி பெறமுடியாது திண்டாடித் திகைப்பர் என்று நாம் அன்று அழுத்தந்திருத்தமாகக் கூறினோம். நாம் மட்டுமா கூறினோம்? நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் பலரும் கூறினர் கட்டுப்பாட்டைத் தளர்த்த இதுவல்ல சமயம் தளர்த்தினால் விளைவு விபரீதமாகும் என்று! ஆனால் சர்க்கார் நம்போன்ற சாமானியர்களின் பேச்சையா கேட்பர்? கேட்பது அவர்களுடைய கௌரவத்துக்குக் குறைவல்லவா? ஆகவே அவர்கள் நம் அனையார் அறிவுரைக்குச் செவி சாய்க்கவில்லை. தம் கருத்தே சரி என்று பிடிவாதமாக எண்ணினர்—கட்டுப்பாட்டைத் தளர்த்தினர்—**எதிர்பார்த்தது நடந்தது—அவர்கள் எதிர்பார்த்தது அல்ல! நாம் எதிர்பார்த்தது—விலை மடமடவென உச்சாணிக் கிளைக்கு ஏறிற்று**—ஏழைகள் கதறினர்—பசி பசி பஞ்சம் பஞ்சம் என்று கூவினர்—படி அரிசி ரூ1-12-0 ஆமே என்று அடிமூச்சுக் குரலாலே அலறித் துடித்தனர்—சர்க்கார் மீண்டும் உணவுக்கட்டுப்பாட்டினையும் பங்கீட்டு முறையையும் முன்போலவே கொண்டுவர முடிவு செய்துவிட்டனர்.

அன்று நாம் கூறியபோது உண்மையை உணர மறுத்த சர்க்கார் இன்று உணர்கிறது. கட்டுப்பாட்டினை ஒழித்துக்கட்டுவதற்கான காலம் இன்னமும் வரவில்லை என்று நாம் சொன்னோம். இல்லை இல்லை, வந்துவிட்டது என்றது சர்க்கார். கட்டுப்பாட்டினையும் எடுத்துவிட்டது. ஆனால் இப்போது, எடுத்தது தவறு என்பதை அறிந்து, செய்த தவற்றினைத் திருத்த முற்பட்டிருக்கிறது. நாம் சொன்னது டிசம்பர் 47ல்! சர்க்கார் அதன் கருத்தை உணரத் தொடங்கி இருப்பது செப்டம்பர் 48ல்! ஒன்பது மாதங்கள் வேண்டி இருக்கிறது நம் சர்க்காருக்கு உண்மையின் உருவம் புலப்பட! ஒன்பது மாதங்களுக்குப் பிறகாவது உண்மையை உணர்ந்தனரே சர்க்கார், நாடெங்கும் பட்டினிப் பட்டாளங்கள் ஏற்பட்டு வங்காளப் பஞ்சங்கள் 'உலா' வரத் தொடங்கி, எலும்பு மலைகள் குவிக்கப்பட்டு, மரணபுரியின் அழைப்பு பாட்டாளிகளின் கரத்தில் எல்லாம் நீட்டப்படும்வரை காத்திராமல்—அதுவே பாராட்டுக் குரிய சேதிதான்!

தேசிய சர்க்காரே! அன்னை பாரத தேவியின் ஆசீர்வாதத்தால் நாடாளவந்த "உத்தமர்"களின் அரசாங்கமே! இத்தனை நாட்களுக்குப் பிறகேனும் கட்டுப்பாட்டையும் பங்கீட்டையும் எடுத்தது தவறு என்பதை உணர்ந்தாயே! ஆயிரம் நன்றி இதற்கு!

கதவு திறந்தது!

அடையாள மறியல் செய்து சைதாப்பேட்டையில் சிறைபுகுந்த தோழர் **என். பி. சச்சிதாநந்தம் M. A** முதலான 23 பேரும், மயிலையில் கைதான **தோழர் M. K தங்கவேலர்** முதலான 26 பேரும் 5-01-48 அன்று 3 வார சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலை ஆயினர். ஏராளமான மக்கள் திரளாகக் கூடிநின்று சிறை மீண்டு வெளியேறிய சிங்க ஏறுகளுக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர்.

படித்துப் பார்த்தில்...!

கடவுள் முனைத்தார்: தணலன் என்னும் பெயர் படைத்த ஆர்வம் மிக்க தமிழ் இளைஞரின் அரிய புத்தகம் இது. விறு விறுப்பான நடை...சுருக்கு சுருக்கென்று உள்ளத்தில் தைக்கும் கருத்துகள்...தெறிப்பான போக்கு......கடவுளைப்பற்றிய பல கசப்பான உண்மைகளை அஞ்சாமல் தருகிறார் ஆசிரியர். தன்மான இயக்கத்தின் சுருக்கம் இப் புத்தகம் **விலை 0-14-0 எரிமலைப் பதிப்பகம் துறையூர் திருச்சி.**

திராவிட மொழிகளும் இந்தியும்: சரியான சமயத்தில் வந்திருக்கும் சரியான புத்தகம். இந்தியால் தமிழ் கெடாது என்று எக்காளம் இடும் ஏமாளிகளுக்கு நல்ல சவுக்கடி தருகிறார் வரலாற்றறிஞர் க. பி. கந்தையா, இச் சுவடிமூலம். அனைவரும் இதனை அவசியம் படிக்கவேண்டும் என்பது நம் கருத்து. **விலை 0-6-0 முத்தமிழ் நிலையம்** வரதா முத்தியப்பன் தெரு, சென்னை 1.

திராவிடத் தோழர்களே!

போர்வாளுக்குச் சந்தாதார் ஆகுங்கள்!

ஆண்டுத் தொகை ரூ. 5. **அரை ஆண்டு ரூ. 2½.**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய போரின் நிலை இது வென்றால் இனி வரும் போர் இதனினும் ஆயிரம் மடங்கு கொடியதாகவும், உலகம் அந்தப் போருக்குப் பிறகு தப்பி நிற்க முடியுமா என்ற ஐயத்தையே எவர் உள்ளத்திலும் எழுப்பக் கூடியதாகவும் இருக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கமுடியாது. ஏனெனில் இனி வருவது அணுக்குண்டு யுத்தம்! சாதாரண வெடிகுண்டு ஒரு நகரத்தின்மீது விழுந்தால் அந்த நகரத்திலே பல மாளிகைகள் மண்மேடாகும். தொழிற்சாலைகள் சிதைந்த சித்திரங்களாகும். பலர் மாள்வர், சிலர் உடல் பழுதுறுவர், என்றாலும் நகரம் வெடிகுண்டுக்குப் பிறகும் தப்பிநிற்கும், மீண்டும் புதுப்பிப்பது கடினமல்ல; மறுபடியும் நகரிலே வாழ்க்கை தொடர்ந்து நடக்கும், இலண்டனிலே எத்தனை முறை குண்டுகள் வீழ்ந்தன சென்ற போரின்போது, என்றாலும் வாழ்க்கை தொடர்ந்து நடந்து கொண்டுதானே இருந்தது போர்க் காலத்திலும்கூட! ஏ. ஆர். பி. தடைச்சுவர்கள், அடுக்கடுக்கான மணல் மூட்டைகள், வெற்றிகரமான இருட்டடைப்புகள், பகைவர் வரவைத் தெரிவிக்கும் அபாயச் சங்குகள், வெடிகுண்டு புகமுடியாத பாதாள அறைகள், அங்கங்கே ஏ. ஆர். பி. பதுங்குமிடங்கள் இவற்றின் துணைகொண்டு பகைவர் வெடிகுண்டுகளைப் பலன் அற்றனவாக ஆக்கவும் முடியும்; ஆனால் அணுக்குண்டு, இத்தனை உபாயங்களையும் வீண் ஆக்கக் கூடியது ஒரு அணுக்குண்டு ஒரு நகரத்தின்மீது வீசப்பட்டால், பிறகு அந்த நகரம் இருந்த இடமே கண்ணுக்குத் தெரியாது, அந்த அளவுக்கு நகரம் தூள் தூள் ஆகிவிடும். சென்ற போரின் முடிவிலே ஹிரோஷிமா நாகசாகி என்ற இரண்டு ஜப்பானிய நகரங்களின்மீது வீசப்பட்ட அணுக்குண்டுகள் அந்த இரு நகரங்களை அடியோடு தரைமட்டமாக்கிவிட்டதை நானிலம் இதற்குள் மறந்திருக்க முடியாது, அந்தக் காலத்தில் வீசப்பட்ட அணுக்குண்டின் "திறம்" அவ்வளவு என்றால், இந்த நாலாண்டு காலத்தில் விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிவிட்டிருக்கும். அணுக்குண்டின் சக்தியும் எத்தனையோ மடங்கு பெருகிவிட்டிருக்கும். ஒரு நகரை அல்ல, ஒரு ஜில்லாவையே அழித்து நிர்மூலமாக்கக்கூடிய 'சக்தி' படைத்த அணுக்குண்டுகளும், அணுக்குண்டினும் பார்க்க பேராற்றல் படைத்த வேறு போர்க் கருவிகளும்கூட கண்டுபிடிக்கப் பட்டிருக்கக்கூடும்;

எனவே இனி ஒரு போர் வருமானால் அதன் விளைவாக மனித சமுதாயமே அழிந்துபோனாலும் போய்விடும், மனிதர்கள் என்ற ஒரு வர்க்கம் உலகத்தில் இருந்தது என்பதற்கான ஒரு சிறு அடையாளங்கூட இல்லாமல், நமது வர்க்கம் அழிந்து போனாலும் வியப்பதற்கில்லை, அவ்வளவு 'பயங்கரம்' நிறைந்தது இனி வரும் போர்.

புதியதோர் உலகு செய்வோம்!

★

திராவிடர் கழக இலட்சியங்களைச் சிறந்த முறையில் விளக்கும் **பெரியார்** அவர்களின் பேருரை. ஒவ்வொரு திராவிடரும் அவசியம் படிக்கவேண்டிய அருமையான சொற்பொழிவு.

விலை அணா 6.

தபாலில் 0—7—0

★

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு,

சென்னை 1.

ஆகவே உலகம் முழுவதுமுள்ள நல்லறிவாளர்கள் யாவரும் போர் வாடையேகூட உலகத்தில் இனி வீசக்கூடாது, போர்ப் பேச்சே இனி மக்கள் சமுதாயத்தில் எழக் கூடாது என்று ஆசைப்படுகின்றனர், ஆனால் வல்லரசுகள், அந்த ஆசையை ஒரு 'தேய்ந்த கனவாக' ஆக்குகின்றன தங்களுடைய விபரீத நடத்தையின் மூலமாக!

ரஷ்யா—ஒரு புறம் வேக வேகமாக அடுத்த மகாயுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறது. பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு—மற்றோர் புறம் போட்டி போட்டுக்கொண்டு போர்க் கருவிகளை உற்பத்தி செய்து குவித்த வண்ணம் இருக்கிறது.

1. அடுத்த இரண்டொரு மாதங்களுக்குள்ளாக, இப்போது இருப்பதுடன் இன்னும் ஒரு லட்சம் பேர் கொண்ட ஒரு பெரும் தரைப்படையைத் திரட்டுவது.

2 ஆகாயப் படையில் பணியாற்றுவதற்காகக் குறைந்தது 60.000 பேர் கொண்ட ஒரு பட்டாளத்தைத் திரட்டுவது.

3. கடல் படையில் தேவைப் பட்டபோது தீவிரப் பங்கெடுத்துக் கொள்வதற்கான பக்குவமும் பயிற்சியும் 7500 வாலிபர்களுக்குத் தந்து அவர்களை ஒரு மூலபல சேனையாக வைத்துக்கொள்வது.

4. குண்டு தளவாடங்கள், டாங்கிகள், வானூர்திகள், கப்பல்கள், மற்ற போர்க் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியை இயன்ற அளவு பெருக்குவது.

5. ஆகாயப் படையெடுப்பை எதிர்த்து காலத்திற்கேற்ற நவீன தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்வது ஆகியவை பிரிட்டிஷ் சர்க்காரின் உடனடித் திட்டங்கள்" என்று லண்டன் பாராளுமன்றத்தில், பிரிட்டிஷ் நாட்டுத் துணைப் பிரதமர் **ஹெர்பர்ட் மாரிசன்** 20—9—48ல் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். அதை அடுத்து, 24-9-48ல் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஆல்பெர்ட் அலெக்சாண்டர், எத்தகைய நெருக்கடியான போரையும் சமாளிக்கத் தக்க பிரம்மாண்டமான முன்னேற்பாட்டுப் போர்த் திட்டங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன என்று தெரிவித்திருக்கிறார். இங்கிலாந்தின் நிலையும் நினைப்பும் இவ் வண்ணம் எனில், **அமெரிக்கா** நீண்ட நாட்களாகவே புதுப் புது அணுக் குண்டுகளை உற்பத்தி செய்வதிலும், உற்பத்தி செய்த அணுக்குண்டுகளின் 'சக்தி'யைப் பரிசோதித்துப் பார்ப்பதிலும், படைகளை ஒன்று பத்து நூறாகப் பெருக்குவதிலும், பெருகிய படைகளுக்குப் புரட்சிகரமான புது முறைகளில் பயிற்சி தருவதிலும் தன் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது. அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் பல காலமாகவே ரஷ்யாவுடன் போர் மனப்பான்மையுடன்தான் பழகி வந்திருக்கிறார்.

சோவியத் ரஷ்யா, போர்க்களத்தில் திரட்டின பிரம்மாண்டமான

படைகளைச் சிறிதும் குறைக்கவில்லை என்றும், மாறாக மேலும் மேலும் அவற்றைப் பெருக்கிய வண்ணம் உள்ளது என்றும் பிரிட்டன் குறை கூறுகிறது. அந்தக் 'குறை' பொய் என்று ரஷ்யா தக்கசான்று காட்டவுமில்லை. காட்டவும் முடியாது. எப்படி முடியும்? அமெரிக்காவும் பிரிட்டனும் போர்க் கருவிகளைத் தட்டித்தீட்டிக் கூர்மையாக்கிக் கொண்டிருக்கும் போது ரஷ்யா மட்டும் கையைக் கட்டிக்கொண்டு சும்மாவா இருக்கமுடியும்?

ரஷ்யாதான் முதலில் ஆதிக்க வெறியைக் காட்டிற்று ஆகவே நாங்கள் தற்காப்பு ஏற்பாடாக படைதிரட்ட வேண்டி நேரிட்டது என்று கூறுகின்றன பிரிட்டனும் அமெரிக்காவும். பிரிட்டனும் அமெரிக்காவும்தான் முதலில் ஆதிக்க வெறியைக் காட்டின, ஆகவேதான் நாங்கள் எதற்கும் தயாராக இருக்கவேண்டி ஏற்பட்டது என்கிறது ரஷ்யா.

“நீ போலந்து, பின்லந்து, செக்கோஸ்லாவிகியா, ருமேனியா, பல்கேரியா ஆகிய இடங்களில் உன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்டுவிட்டாயல்லவா, இது ஆதிக்கவாதந்தானே” என்று பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யாவைக் குற்றஞ்சாட்டினால், “நீங்கள் கிரீசிலும் பாலஸ்தீனிலும் பிரான்சிலும் பெல்ஜியம் ஹாலந்து டென்மார்க் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது குற்றமல்லவா?” என்று மடக்கிக் கேட்கிறது ரஷ்யா.

மார்ஷல் திட்டம் தீட்டின அமெரிக்காவும் பிரிட்டனும். கம்யூனிஸ்ட் ஆதிக்க திட்டம் தீட்டிற்று ரஷ்யா. “மேற்கு ஐரோப்பிய நாடுகள் சென்ற போர்க் காலத்தில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட்டால் புதுவாழ்வு பெறமுடியாது தவிக்கின்றன. அவை சிறு சிறு நாடுகள். ஆகவே அவை தாமாக, தம் ஆற்றலின் துணைகொண்டே, பொருளாதாரச் சீர்கேடு என்ற படுபாதாளத்திலிருந்து கரையேற முடியாது. நாம் பண உதவி செய்தால் அதனை, அந்த நாடுகள் ஜாம் ஜாமென்று வரவேற்கும். ஆனால் அந்தப் பண உதவிக்கு ஈடாக, அந்த நாடுகள், ரஷ்யாவுடன் சேரக்கூடாது, நம்முடன்தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கலாம், நம்முடைய டாலர் ஏகாதிபத்தியத்தை அந்த மேற்கு ஐரோப்பாவில் நிலைநாட்டலாம்” என்று அமெரிக்கா திட்டமிட்டது—அந்தத் திட்டத்தின் பெயர்தான் **மார்ஷல் உதவித் திட்டம்**. அந்தத் திட்டத்தின் வலையில் சிக்கிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் டாலர் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைகள் ஆயின.

அதேபோல, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் — ருமேனியா போலந்து முதலியன— சோவியத் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைகள் ஆகிவிட்டன. அங்கே அமெரிக்கா பண ஆசை காட்டி அந்த நாடுகளைப் பணிய வைத்தது போலவே தான், இங்கே, ரஷ்யா, பண உதவி பண்ட உதவி முதலிய ஆசைகளைக் காட்டி இந்த நாடுகளைப் பணியவைத்தது.

சித்திரபுத்திரன் எழுதுகிறார்!

★

சித்திரபுத்திரன் என்ற புனை பெயரில் தலைவர் பெரியார் எழுதிய ஐந்து சுவையான உரையாடல்கள். படிக்கப் படிக்க இன்பமூட்டுபவை.

விலை 0-6-0

தபாலில் 0-7-0

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

ஆக, ஐரோப்பா இன்று இரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது— அமெரிக்க ஆங்கில ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்டுவிட்ட மேற்கு ஐரோப்பா ஒன்று. சோவியத் ரஷ்யாவின் புன்சிரிப்பு ஏகாதிபத்தியத்திற்கு உள்ளாகிவிட்ட கிழக்கு ஐரோப்பா மற்றொன்று.

ப்ரான்சு, ஜெர்மனி, இந்த இரண்டைத் தவிர மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் இந்த இரு வட்டாரங்களில் ஏதோ ஒன்றில் திட்டவட்டமாகச் சேர்ந்துவிட்டன.

ப்ரான்சு இன்று அமெரிக்க ஆங்கில ஏகாதிபத்திய அச்சுடன் இணைந்து நிற்கிறது. ஆனால் இந்த நிலை இப்படியே நீடிக்குமா என்பது ஐயம்தான். ஏனெனில் அங்கே கம்யூனிஸ்ட் கட்சி வேகமாக வளர்ந்துவருகிறது. கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கி, சர்க்கார் கட்சியாக அது மாறி, நாட்டு ஆதிக்கம் முழுவதும் அவர்களிடம் போகுமானால், பிறகு, பிரான்சு, ரஷ்யாவின் பக்கம் சாய்வது நிச்சயம். பிரான்சும் ரஷ்யாவின் பக்கம் சாய்ந்துவிட்டால் ஐரோப்பாவில் ரஷ்யாவின் கை மேலோங்கிவிடும் எனவே பிரான்சில் கம்யூனிஸ்ட் கட்சி வளராமல் இருப்பதற்கான வழி வகைகளைத் தேடுவதோடு பிரான்சுக்கு அதன் தகுதிக்கு மீறிய பதவிகள் அதிகாரங்கள் மதிப்பு மரியாதைகள் முதலியவற்றை உலக மன்றத்தில் அதற்குத் தேடித்தந்து, அதன் மூலம் அந்த நாட்டை தங்கள் பக்கம் நிலையாகச் சேர்த்துக்கொள்ள முயல்கின்றன அமெரிக்காவும் பிரிட்டனும்.

இந்த ஐரோப்பிய அரசியல் சதுரங்கத்தில் ஜெர்மனி கேந்திர ஸ்தானம் வகிக்கிறது—ராஜ தந்திரிகளின் நடையிலே பேசுவதானால்!

ஜெர்மனி என்று இன்று தனி நாடு ஒன்றில்லை. ஹிட்லர் காலத்தில் உலகம் முழுவதையும் விழுங்கிவிடுமோ என்று எண்ணப்பட்ட ஜெர்மன் ஏகாதிபத்தியம் இன்று மண்ணோடு மண்ணாய் மடிந்து போய்விட்டதோடு ஜெர்மனி என்ற ஒரு தனிநாடு இருக்கிறதா என்று கேட்கவேண்டிய பரிதாப நிலையும் ஏற்பட்டுவிட்டது. உலகம் முழுவதையும் போருக்கு இழுத்து, மனித சமுதாயத்திற்கே மாபெரும் கொடுமைகளை இழைத்த ஜெர்மனி, இதுபோது நான்கு துண்டுகளாக வெட்டப்பட்டு ரஷ்யாவிடம் ஒரு துண்டும், பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளிடம் ஒவ்வொரு துண்டுமாக 'தானம்' வழங்கப்பட்டுவிட்டது.

பெர்லின் — ஜெர்மனியின் தலைநகரம்! அதுவும் இதேபோல நான்கு துண்டுகளாக்கப்பட்டு நால்வரிடமும் தரப்பட்டுவிட்டது.

ரஷ்யாவுக்கு இந்தப் பங்கீட்டில் கிழக்கு ஜெர்மனியும் கிழக்கு பெர்

லின் நகரமும் கிடைத்திருக்கின்றன. ஆனால் அது **நடைமுறையில்** பெர்லின் முழுவதையும் தன் ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டது என்றும், பிரிட்டனும் அமெரிக்காவும் பிரான்சும் தத்தம் பங்கினைச் சேர்ந்த பெர்லின் பகுதிகளுக்குப் போக்கு வரவுகூட கொள்ளமுடியாதபடி ரஷ்யா பெர்லினைச் சுற்றி பொருளாதார முற்றுகை போட்டிருக்கிறது என்றும், தன் பங்குக்கு வந்த பெர்லினில் மட்டுமன்றி, முழு பெர்லினிலும் வசிக்கும் மக்கள் யாவருக்கும் அது உணவுப் பங்கீடு தருவது, நாணய மாற்று செய்வது முதலிய செயல்களின் மூலம், தங்கள் மூவரையும் பெர்லினைவிட்டே விரட்ட அது சதி செய்கிறது என்றும் ஆகவே இவ்வளவு தூரம் தங்களைப் பகைத்துக் கொள்ளும் ரஷ்யாவுடன் தாங்கள் ஒத்துப்போவது இயலாத செயல் என்றும் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு ஆகிய மூவல்லரசுகளும் ஒரு கூட்டறிக்கை விட்டிருக்கின்றன. இந்த அறிக்கையில் காணப்படும் குற்றச் சாட்டுகள் உண்மை அல்ல என்றும், தங்கள் ஆதிக்க வாதத்தை மறைப்பதற்காக பிரிட்டனும் அமெரிக்காவும் தொங்கவிடும் திரைச் சீலைகளே இந்தக் குற்றச்சாட்டுகள் என்றும், பெர்லின்மீது எத்தகைய முற்றுகையையும் தாங்கள் இடவில்லை என்றும் ரஷ்யர்கள் பதில் அறிக்கை தந்துள்ளனர்.

இதிலே யார் சொல்வதுஉண்மை என்பது தெரியவில்லை என்றாலும் இரு சாராரும் பெர்லினை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயல்கின்றனர் என்பது தெளிவு.

பெர்லின் நகரத்தின் மீது இந்த வல்லரசுகளுக்கு இவ்வளவு "கள்ளக் காதல்" ஏற்பட்டு இருப்பதற்குக் காரணம், பெர்லின் ஜெர்மனியின் தலைநகரமாகவும் முதல் நகரமாகவும் இருப்பதால், அது யார் கைக்குப் போகிறதோ அவர்கள் கைக்கே ஜெர்மனி முழுவதும் போய்விடும் என்பதும் ஜெர்மனி ஐரோப்பாவின் நடுவிடத்திலும் முக்கிய இடத்திலும் அமைந்திருப்பதால், ஜெர்மனி யார் கைக்குப் போகிறதோ அவர்கள் கைக்கே ஐரோப்பா முழுவதும் போய்விடும் என்பதும்தானே தவிர வேறில்லை.

ஆகவே பெர்லின் பிரச்சினை என்று சொல்லப்படுவது, ஐரோப்பாவில் ரஷ்யாவும் பிரிட்டிஷ்—அமெரிக்க நாடுகளும் ஆடும் அரசியல் சூதாட்டத்தின் முக்கியமான கட்டமும், வெற்றி எவர் பக்கம் என்பதை நிலைநாட்டவிருக்கும் முடிவான கட்டமும் ஆகும்'

'பெர்லினில் ரஷ்யாவின் போக்கு உலக அமைதியைக் குலைப்பதாக இருக்கிறது' என்று அமெரிக்க—ஆங்கில—பிரஞ்சு நாடுகள், ஐக்கிய நாடுகள் சங்கம் என்று சொல்லப்படும் உலக மன்றத்திற்கு ஒரு தீர்மானம் அனுப்பி இருக்கின்றன. அந்தத் தீர்மானம் அர்த்தமற்றது, ஆகவே அது விசாரணைக்கு வரும்போது, அந்த வழக்கு விசாரணை நாடகத்தில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ரஷ்யப் பிரதிநிதிகள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். அமெரிக்க ஆங்கில பிரஞ்சு நாடுகள், ரஷ்யா வராவிட்டாலும் சரி, விசாரணை நாடகத்தை நடத்தியே தீருவது என்ற முடிவுக்கு வந்து, நாடகத்தை நடத்தியும் தீர்த்துவிட்டால், பிறகு, ரஷ்யா, உலக மன்றத்தை விட்டே வெளியேறி விட்டாலும் வியப்பதற்கில்லை. இப்போது ரஷ்யாவை ஆங்கிலோ அமெரிக்க நாடுகள் கலந்து பேசுவதற்கு எஞ்சி இருக்கும் ஒரே ஒரு இடம் உலக மன்றம் தான். அந்த மன்றத்தை விட்டும் ரஷ்யா வெளியேறிவிட்டால் பின்னர் இரு சாராருக்குமிடையே உள்ள 'பிளவு' வளர்ந்து பெருகி போர் என்ற முடிவுக்குத்தான் வர வழி ஏற்படுமே தவிர கலந்து பேசி வேற்றுமைகளைக் குறைத்து உலக ஒற்றுமைக்கு அடி கோலல் இயலாது.

"நாம் இனியும் கனவுலகத்தில் இருந்துகொண்டிருக்க முடியாது. ஒரே உலகம் என்ற அடிப்படையில் நாம் செல்ல முடியாது என்பது தெளிவாகிவிட்டால், நாம் நமக்குப் பிடித்தமான தனித்தனி வட்டாரம் என்ற அடிப்படையில் முன்னேறுவதைத் தவிர வேறு வழியில்லை. நாம் யாருடன் ஒத்துப்போக முடியுமோ அவர்களுடன்தான் ஒத்துப்போக வேண்டும். யாருடன் இணைந்துநின்று வேலை செய்ய முடியுமோ அவர்களுடன்தான் இணைந்து நின்று வேலைசெய்ய வேண்டும். யார் நம்மை நம்பி நம்முடன் சேர்ந்துநிற்க ஆசைப்படுகிறார்களோ, அவர்களைத்தான் நாமும் நம்பி சேர்ந்துநிற்க ஆசைப்படவேண்டும் ரஷ்யா நம்முடன் சேர்ந்துநிற்க ஆசைப்படவில்லை... நாம் என்ன செய்ய முடியும்?" என்று 27-9-48ல், சீமைப் பாராளு மன்றத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டமைச்சர் **எர்னெஸ்ட் பெவின்** தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதோடு, "பயங்கரமான ஓர் அணுக்குண்டு யுத்தம் ஏற்பட்டு மனித சமுதாயத்திற்குச் சொல்லொணாத வேதனை ஏற்படுமானால் அதற்குரிய முழுப் பொறுப்பும் ரஷ்யாவைத்தான் சேர்ந்தது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்" என்றும் விளக்கி இருக்கிறார். அடுத்த நாளே, ரஷ்யாவின் வெளிநாட்டமைச்சர் **விஷின்ஸ்கி** அதைவிடக் காரமாகவும் அதைவிட அழுத்தமாகவும் குறிப்பிட்டிருக்கிறார், இனி ஒரு போர் ஏற்படுமானால், அந்தப் போர் ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்திய வெறியாட்டத்தின் விளைவாக இருக்கமுடியுமே தவிர வேறு எப்படியும் இருக்க முடியாது என்று!

இதுவரை அமெரிக்க ராஜதந்திரிகள், "அணுக்குண்டு தங்களிடம் மட்டுமே இருக்கிறது — எனவே இனி வரும் போரில் தங்களுக்கே வெற்றி கிட்டும்" என்று எண்ணமிட்டுக்கொண்டு இருந்தது. ஆனால் இப்போது ரஷ்யா முதன்முதலாக அணுக்குண்டு தங்களிடமும் இருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாக அறிவித்துவிட்டது.

ரஷ்யக் கரடி ஒரு புறமும், அமெரிக்கக் கழுகு பிரிட்டிஷ் சிங்கம் இவை இரண்டும் மற்றோர் புறமும் இருந்துகொண்டு தத்தம் பக்கம் சிற்சில ஐரோப்பிய நாடுகளை பின்பலம் சேர்த்துக் கொண்டு, "கவாத்துப்" பழகுகின்றன. ஒன்றை ஒன்று அமைதியைக் குலைக்கும் கயவர்கள் என்று குற்றம் சாட்டிக்கொண்டே மூவல்லரசுகளும் உலகத்தை யுத்தபுரிக்கு வலைபோட்டு இழுக்கின்றன.

இது, வல்லரசுகளுக்கு, வழக்கமான விளையாட்டு! ஆனால்...... மனித சமுதாயத்திற்கு......நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது......!

......படுபாதாள வீழ்ச்சிக்கான புத்தம் புதியதோர் அழைப்பு!

———

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'பொன்னி' என்றான். அந்தச் சொல் கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோலிருந்தது. அவள் சிந்தனையைக் கலைக்கும் சக்தி அதற்கு இல்லை. அவள் சிந்தை பேய்க் காற்று வேகத்தில் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்திப்பதில் ஈடுபட்டது.

'பொன்னி'...மீண்டும்முயற்சித்தான். அவன்தொண்டையைவிட்டு அந்தச் சொல் வெளிவரவேயில்லை. அவன் அவள் மடியில் திரும்பிப் படுத்தான். ஆம்! அதுதான் அவனின் கலைக்க முடியாத கடைசி நித்திரை. மாடத்தில் இருந்த அகல் விளக்கு 'டக்' கென்று அணைந்தது.

பல்லி பாசுரம் பாடிற்று. எங்கோ ஒரு கோட்டான் அலறிக்கொண்டு ஓடிற்று. இரண்டு மலரில் ஒரு மலர் கிள்ளியெறியப்பட்டுவிட்டது.

எதிர்காலமும் இப்படித்தானோ என்று சிந்தனையில் மூழ்கியிருக்கும் பொன்னிக்கு அண்ணனின் ஆத்மா அமரத்வமடைந்துவிட்டது என்று அறிய இன்னும் எத்தனை நாழியோ?" என்று சிலை சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தது. ஒரு நீண்ட பெருமூச்சு அதன் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு என் தேகத்தை சுரீரென்று தாக்கிற்று. சிலையின் கண்களிலிருந்து சிதறும் ஒவ்வொரு துளியும் இரத்தத்தில் தோய்ந்து வெளிப்படுவதுபோலிருந்தது.

நான் சிலையை நோக்கினேன்.

என் உள்ளக் குறிப்பை உணர்ந்ததுபோல் சிலை பேசிற்று.

"அண்ணன் இறந்துவிட்டான் என்பதை அவள் உள்ளம் உணர்ந்ததும் 'ஆ' வென்று அகோரமாக அலறினாள். அவ்வளவுதான். அவள் இதயம் படீரென்று வெடித்தது. அதனுள் இருந்த ஜீவப் பறவையும்வட்டமிட்டுக்கொண்டே வானத்தை நோக்கிப் பறந்தது.

அடுத்த நாள் அந்த நாதியற்ற இரு பிணங்களை கார்பொரேஷனின் கையாட்கள் அருகில் இருந்த கூவம் ஆற்றின் கரையின்மேல் பள்ளம் வெட்டிப் புதைத்தனர்" என்று முடித்தது சிலை.

சிறிது நேரம் மௌனம். என் இதயத்தில் நீண்ட புயல், பெருத்த வெள்ளம் — இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து அறிவு என்னும் ஆராய்ச்சித் தீயை என் உள்ளத்தில் மூட்டிவிட்டது.

நான் சிலையைப் பார்த்தேன். பொல பொலவென்று உதிர்ந்த கண்ணீர் திடீரென்று நின்றுவிட்டது. சிலை சிரிக்கவில்லை. கண்களைச் சுழட்டி சிமிட்டவில்லை உயிருடன் சிரித்த சிலை கற்சிலையாகிவிட்டது.

என் உள்ளத்தில் அறிவுத்தணல் கொழுந்துவிட்டு எரிந்தது. சிலை சொன்ன கதையை—கதையல்ல—நாட்டிலே அன்றாடம் நிகழும் அந்நிகழ்ச்சியை எண்ண எண்ண, பன்மடங்கு வேகத்தில் அடித்துக் கொண்டது என் இதயம்.

மேனாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் போட்டியிட்டு என் கண்முன் வந்துநின்று நர்த்தனம் புரிந்து மறைந்தன.

இன்று நாட்டிலே ஒரு கும்பல், புரட்சி வாசனையை இன்னதென்றே அறிந்திராத ஒரு கும்பல் —மத ஆணவம் பிடித்து, உண்டு கொழுத்து, இறுமாப்புடன் மார் தட்டி, ஜார் அரசனைத் தன் கைப் பாவையாக ஆக்கிக்கொண்டு கொடுங்கோலாட்சி புரிந்த ரஷ்யப் பாதிரிக் கூட்டத்தைப் போல, இங்கும் ஒரு கூட்டம் உலாவிக்கொண்டிருப்பதுடனல்லாமல் தர்ப்பைப் புல்லைக்காட்டி பாட்டாளி மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

அன்று பிரெஞ்ச் பாஸ்டில் சிறை தவிடுபொடி யாக்கப்பட்டு கொடுங்கோலர்கள் வீழ்த்தப்பட்டு, செங்கோல் உழைப்பாளியின் கைக்கு மாறியதை அறியாது இன்னமும் மதோன்மத்தராக வாழும் ஒரு கூட்டம் நடமாடிக் கொண்டுதானிருக்கிறது இந்த நாட்டிலே.

உழைப்பவனுக்கு அரைவயிறு கூட நிரம்பாமலிருக்கும்பொழுது உழைக்காத ஒருதரகர் கூட்டம், மதம், சாதி, இனம், கடவுள்—இவைகளின் பெயரால் தனித்தனியாக மாடமாளிகை கூட கோபுரங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆநந்த வாழ்வு செலுத்திக் கொண்டுதான் இருக்கிறது இந்த நாட்டிலே...இந்த எண்ணப் புயல்கள் எல்லாம் ஒருங்கே வீசின என் உள்ளத்தில். இதயம் குமுறியது. நரம்புகள் புடைத்தன.

இவ்வளவையும் உழைப்பவன் உணர்ந்தால், பசிப்பவன் பார்த்தால் எப்படி இருக்கும் அவன் மனம்? அப்பொழுது அவன் உள்ளத்திலிருந்து வெளிப்படும் தீ ஒரு புரட்சியை அல்லவா உண்டு பண்ணிவிடும்? அப்படி நேர்ந்தால், அந்தப் புரட்சி ரஷ்யப் புரட்சியையும் பிரஞ்ச் புரட்சியையுமல்லவா மீறிவிடும் — ஆனால் நடக்குமா?" என்று எண்ணினேன்.

"ஏன் நடக்காது. கோழைத்தனத்தை விட்டு உன் பேனா முனையை புரட்சிப் பாதையில் செலுத்தினால் ஏன் நடக்காது? அந்நாளில் எழுச்சியை உண்டு பண்ணிய ரூஸோ, வால்டேர் இவர்களைப் பற்றி நீ நினைத்தாலே உன்கைபுரட்சிக்கையாகமாறுமே" என்று சொல்லி நிறுத்தியது சிலை.

ஆம்! சிலை சொல்லியதில் தவறில்லை. ராஜினாமா செய்து விட்டு ஆசிரியர் பதவியிலிருந்து விலகிவிடலாம் என்று நான் எண்ணிய எண்ணத்தை சிலை தகர்த்தெறிந்தது. வேலையில் இருந்து கொண்டே பேனா முனையால் ஒரு பெரிய சமுதாயப் புரட்சியை உண்டுபண்ண முடியும் என்று திடமானமுடிவிற்கு முடிவில்நான் வந்துசேர்ந்தேன்.

வெளி உலகத்தைக் கவனித்தேன். மழை விட்டு வானம் நன்றாக வெளுத்திருந்தது. புரட்சி செய்த பேனாவீரர்களைப் போல் நானும் அவர்களில் ஒருவனாக வேண்டும் என்ற நினைவாகவே விடுவிடுவென்று ஆபிஸை நோக்கிப் புறப்பட்டேன்.

'களுக்' கென்று சிலை சிரித்தது.

ஆம்! சிலையின் சிரிப்புதான் என்னை சிந்திக்கும்படிச் செய்தது.

ஏன் சிரித்தது சிலை? என்னால் அப்படி ஆக முடியாதென்றா? ஏன் முடியாது?

* * *

இரண்டு திங்கள் கழித்து ஆயிரக்கணக்கான கருஞ் சட்டைப் படையினருடன் ஒன்றாக உட்கார்ந்து விருந்து சாப்பிடுவதற்கு என்னையும் ஒரு விருந்தாளியாக அரசாங்கத்தார் அழைத்துக் கொண்டனர்.

—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுளர்கள் பூத உடல்தாங்கி, நம் நாட்டுக்கு வந்து வந்து போனதாகக் கூறப்படும் அந்தக் காலத்திலிருந்து, அவர்கள், நாம் எத்தகு துயர் உற்றாலும் நம்மை எட்டியும் பாராத இந்தக் காலம் வரை, உண்மையிலேயே, மது, நம் நாட்டிற்குத் தந்திருக்கும் கேடு அளவிட முடியாதது.

எனவேதான **மதுவிலக்கு** என்ற உடனே கட்சி வேற்றுமையின்றி, திராவிடநாட்டில் உள்ள அனைவரும் சென்னை சர்க்காரின் திட்டத்தை மனமார வரவேற்று கைபாட உடலாரத் துணை செய்ய விரும்புகின்றனர்.

ஆனால் **டில்லி**, பொருளாதார சாஸ்திரத்தையும் வெள்ளைக்கார துரைமார்களின் ஏடுகளையும் தூக்கிக்கொண்டு வந்து நம் முன்னால் போட்டு, **"ஐயையோ! மதுவிலக்கா இப்போது கூடாது!"** என்று அபாய சங்கு ஊதிடலாயிற்று. இப்போதா மதுவிலக்கு, ஆகாதே இந்தப் போக்கு என்று மகுடி வாசித்தது. "இந்நாளில் மதுவிலக்குச் செய்வது பணப் பெருக்கத்தைத் தரும், பணப் பெருக்கம் மக்கள் வாழ்வை வதைக்கும் என்று பொருள்நூல் நிபுணர்கள் கருதுகின்றனர்" என்றெல்லாம் விபரீதவாதம் புரிந்தது. வாதம் புரிந்ததோடில்லை, இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு செல்லாத்த செப்புக் காசும் நாங்கள் தரமாட்டோம்——ஜாக்கிரதை, என்று மிரட்டியும் பார்த்தது, ஆனால் சென்னை சர்க்கார் இந்த மிரட்டலுக்கும் முத்தான யோசனைக்கும இங்கித வார்த்தைகட்கும் இதோபதேச உரைகளுக்கும் பயந்து பணியாது, மயங்கித் தயங்காது, இந்த அக்டோபர் 2 முதல்—உத்தமர் காந்தியாரின் 79 வது பிறந்த நாள் முதல், **திராவிட நாடு எங்கணும்** மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டனர். இது மிக மிக மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி மட்டுமல்ல, நமது மனம் நிறைந்த வாழ்த்துக்கும் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய மகத்தானதோர் திருவிழாவும்கூட. மகத்தானதோர் திருவிழா மட்டுமல்ல, வரலாற்றிலே இடம் பெறும் சிறப்புடைய சோதனை. நாம் இந்தத் திட்டத்திலே வெற்றி பெற்றுவிட்டால்—வெற்றி பெறுவோம் என்பதில் நமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது—உலகத்திலே மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற்றுவிட்டது என்ற சொல் வரலாற்றிலே குடிபுகும். ஆனால், நமது மதிப்பிற்குரிய **முதல்வர் ஓமந்தூரார்** அழகாகக் குறிப்பிட்டிருப்பதுபோல, நாம் இங்கே தொடங்கியுள்ள இந்தத் திட்டம் தோற்றுவிட்டால் உலகத்திலே எங்கும் எக்காலத்திலும் மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறவே பெறாது என்ற திட்டமான முடிவு ஏற்பட்டுவிடும். ஏனெனில், அமெரிக்கா இருபது ஆண்டுகட்கு முன்னால் மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து மிகக் கடுமையான சட்டங்களை நிறைவேற்றிக் கண்டிப்பான முறையில் நடந்து பார்த்தும், தோற்றது—பின்னர் திட்டத்தையே கைவிட்டுவிட்டது. அவன் பின்னர் நாம்தான் தைரியமாக, முதன்முதலாக, திட்டவட்டமாக, நமது எல்லை முழுவதிலும், முழு மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறோம். ஆகவே நமது கடமையும் பொறுப்பும் இந்தத் திட்டத்தை எப்படியும் வெற்றிபுரிக்கு அழைத்துச் சென்றே தீரவேண்டிய கட்டாயத்தில் நம்மை நிறுத்துகின்றன—நாம் இந்த மனிதாபிமானக் கடமையை நிறைவேற்றி வைப்போமாக.

இந்தியா என்ற இந்தப் பரந்த துணைக்கண்டத்திலேயே நமது திராவிட நாட்டிலேதான் இந்த முழு மதுவிலக்குத் திட்டம் முதன்முதலாக அமுலுக்கு வருகிறது, இது நமக்கு மிக மிகப் பெருமை தரும் சேதி.

ஆனால் ஒன்று. இந்தியக் கண்டத்தில் உள்ள ஏனைய மாகாணங்கள் மட்டுமல்ல உலகம் முழுவதுமே நமது இந்தத் திட்டம் என்ன ஆகிறது என்பதை மிகவும் கூர்மையாகக் கவனித்து வரும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, நமது வெற்றி உலகத்தின் வெற்றி; நமது தோல்வி உலகத்தின் தோல்வி. எனவே இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கான எல்லாவித உதவிகளையும் நாட்டிலே உள்ள சகல கட்சியினரும் சென்னை சர்க்காருக்குத் தரவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்வதோடு, வேறு எந்தக் கட்சியினர் எப்படி நடந்து கொண்டாலும், திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை, சர்க்காருடன் அதற்குள்ள மற்ற வேற்றுமைகள் ஆயிரம் இருந்தாலும், மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற, அது, சர்க்காருடன் பரிபூரணமாக ஒத்துழைக்கும் என்பதையும், ஒருக்கால், டில்லி, மீண்டும் ஏதேனும் தாக்கீது பிறப்பித்து சென்னை காங்கிரஸ் சர்க்கார் அதற்கிணங்கி இந்த மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிட்டு விட்டாலும், திராவிடர் கழகம், சர்க்கார் விட்ட இடத்திலிருந்து திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றி கண்டே தீரும் என்பதையும் இச் சமயத்தில் தெளிவாக அறிவித்துவிட விரும்புகிறோம்.

வெல்க மதுவிலக்குத் திட்டம்!

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)